©
தமிழ்நாடு அரசு
2017

[பதிவு எண். தநா/சிசிஎன்/467/2012 14
[நிமு. எண். 197/2009
[விலை ரூ. 0.80 பைசா

# தமிழ்நாடு அரசு அரசிதழ்

**அசாதாரணம்** அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது

எண். 196] சென்னை, புதன், ஜுன் 28, 2017

ஆனி 14, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048

## பகுதி III – பிரிவு 1 (அ)

**தலைமைச் செயலகத் துறைகளால் வெளியிடப்பட்ட பொது சட்ட விதிமுறைகள், அறிவிக்கைகள், ஆணைகள், ஒழுங்குமுறை நெறிகள், இன்னபிற.,**

### அரசின் அறிவிக்கைகள்

**வணிகவரிகள் மற்றும் பதிவுத் துறை**

தமிழ் நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள் 2017க்கு திருத்தம்

*[அ.ஆ.நிலை எண். 55, வணிகவரிகள் மற்றும் பதிவு (பி1), 28 ஜுன் 2017
ஆனி 14, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண். II(2)/சிடிஆர்/532(ஆ–1)/2017**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017 ல் (தமிழ்நாடு சட்டம் 2017 ன் 19ல்) பிரிவு–1, உட்பிரிவு (3) ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைபடுத்தி, தமிழ்நாடு ஆளுநரால், கூறப்பட்ட இந்த சட்டத்தின் பிரிவுகள் 1, 2, 3, 4, 5, 10, 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 139, 146 மற்றும் 164 ன் விதிமுறைகள், 2017 ஜுன் 28 ம் நாளில் நடைமுறைக்கு வரும் நாளாக இதன் மூலம் நியமிக்கப்படுகிறது.

**அறிவிக்கை – II**

*[அ.ஆ.நிலை எண். 55, வணிகவரிகள் மற்றும் பதிவு (பி1), 28 ஜுன் 2017
ஆனி 14, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண். II(2)/சிடிஆர்/532(ஆ–2)/2017**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும சேவைகள் வரிச் சட்டம் 2017–ல் (தமிழ்நாடு சட்டம் 2017 ன் 19 ல்) பிரிவு 146–ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி, குழுவின் பரிந்துரைப்படி, தமிழக ஆளுநரால் பதிவு பெறுவதற்கும், வரி செலுத்துவதற்கும், நமூனாக்களை அளிப்பதற்கும், ஒருங்கிணைந்த வரி கணக்கிடுவதற்கும் மற்றும் தீர்வு செய்வதற்கும் மற்றும் மின்னனு வழிப்பட்டியல் ஆகியவற்றை

எளிதாக்கவும் www.gst.gov.in –னை சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக்கான பொது மின்னனு வலைவாயிலை இதன் மூலம் அறவிக்கப்படுகிறது.

விளக்கம்:– இந்த அறிவிக்கையின் நோக்கத்திற்காக, "www.gst.gov.in" -ன் பொருளானது சரக்குகள் மற்றும் சேவைகள் வலைதளத்தால் மேலாண்மை செய்யப்படும் இணையதளம், 2013 ம் ஆண்டு நிறுவனச்சட்டம் (மத்திய சட்டம் 2013 ன் 18ல்) பிரிவு 8 ன் விதிமுறைகளின் கீழ் ஒருங்கிணைந்தமைந்த ஒரு நிறுவனமாகும்.

2. 2017, ஜுன் 28 ம் நாள் இந்த அறிவிக்கை நடைமுறைக்கு வருகிறது.

**<u>அறிவிக்கை – III</u>**

*[அ.ஆ.நிலை எண். 55, வணிகவரிகள் மற்றும் பதிவு (பி1), 28 ஜுன் 2017*
*ஆனி 14, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண். II(2)/சிடிஆர்/532(ஆ–3)/2017**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் 2017 (தமிழ்நாடு சட்டம் 2017 ன் 19ல்) உட்பிரிவு 2 பிரிவு 23–இல் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறை பயன்படுத்தி, குழுவின் பரிந்துரைகளின் படி, தமிழ்நாடு ஆளுநரால், மேற்குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் பதிவு பெறுவதிலிருந்து விலக்களிக்கப்பட்ட வகையான நபர்களை பற்றி கூறும் சட்டப்பிரிவு 9–ன் உட்பிரிவு 3–ன் கீழ் சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டையும் பெறுபவர் எதிரிடை மாற்ற அடிப்படையில் செலுத்தும் மொத்த வரியினை செலுத்த வேண்டிய பொறுப்பினை உடைய வரி விதிக்கத்தக்க சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டின் வழங்கல் செய்வதில் மட்டும் ஈடுபடுபவர்கள் இதன் மூலம் குறிப்பிடப்படுகிறார்கள்.

2. 2017 ஜுன்28 ம் நாள் இந்த அறிவிக்கை நடைமுறைக்கு வருகிறது.

முனைவர். ச. சந்திரமௌலி,
அரசின் கூடுதல் தலைமை செயலாளர் (முகூபொ).